# மக்களின் குடும்ப வருமானம்

# 8,479 ரிங்கிட்டாக உயர்ந்துள்ளது




புத்ரா ஜெயா, ஜூலை 30-

கடந்த ஆண்டு நாட்டு மக்களின் குடும்ப வருமானம் ஆண்டுக்கு 2.4 விழுக்காடு உயர்ந்து மாதம் ஒன்றுக்கு அவர்களின் குடும்ப வருமானம் 8,479 ரிங்கிட்டாக உயர்ந்துள்ளதாக மலேசிய புள்ளிவிவரத்துறை கூறியது.

கடந்த 2019ஆம் ஆண்டு மலேசியக் குடும்பங்களின் மொத்த வருமானம் மாதத்திற்கு 7,901 ரிங்கிட்டாக மட்டுமே இருந்தது. ஆனால், அது கடந்த 2022ஆம் ஆண்டு 8,479 ரிங்கிட்டாக உயர்ந்ததாக அத்துறையின் தலைவர் முகமட் உஸிர் மஹிடின் கூறினார்.

நடுத்தர மக்களின் குடும்ப வருமானம் 2.5 விழுக்காடாக உயர்ந்துள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில் 5,873 ரிங்கிட்டாக இருந்த அவர்களின் குடும்ப வருமானம் கடந்த 2022ஆம் ஆண்டு 6,338 ரிங்கிட்டாக உயர்ந்துள்ளது என்றார்.

ஒரு குடும்பத்தில் 3.8 பேர் இருக்கும் வேளையில், 1,8 பேர் வருமானம் பெறுவதை வைத்து இந்த குடும்ப வருமானம் மதிப்பிடப்பட்டதாக நேற்று முன்தினம் மலேசிய மக்களின் குடும்ப வருமான அறிக்கையை பொருளாதார அமைச்சர் ரஃபிஸி ரம்லி அறிவிக்கும் நிகழ்ச்சியில் அவர் தெரிவித்தார்.

சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள், சொந்த தொழில் புரிபவர்கள் உட்பட முதலீட்டுகளிலிருந்து வருமானம் பெறுவோரும் இதில் அடங்குவர் என்றார்.

மக்களின் சராசரி குடும்ப வருமானம் 8,479 ரிங்கிட்டாக இருக்கும் வேளையில், புத்ரா ஜெயாவில் வேலை செய்பவர்ளின் குடும்ப வருமானம் மாதம் 13,325 ரிங்கிட்டாகவும் கோலாலம்பூரில் வேலை செய்பவர்களின் குடும்ப வருமானம் 13,325 ரிங்கிட்டாகவும் சிலாங்கூரில் வேலை செய்பவர்களின் குடும்ப வருமானம் 12,223 ரிங்கிட்டாகவும் ஜோகூரில் வேலை செய்பவர்களின் குடும்ப வருமானம் 8,517 ரிங்கிட்டாகவும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

---

இருப்பினும், இந்த விஷயத்தை திறமையுடன் கையாள முடிந்தால், பாரிசான் நேஷனலுக்கும் பக்காத்தான் ஹராப்பானுக்குமிடையே புதிய 'ஒற்றுமை அலையை' உருவாக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒற்றுமை அரசாங்கத்தின் சிறந்த சாதனைகள் பக்காத்தான் ஹராப்பான் - பாரிசான் நேஷனலுக்கும் இடையே ஒத்துழைப்பு இன்னும் வலுப்பெறும் என்றார்.

ஒரு பின்னடைவு (எதிர்ப்பு) இருக்கலாம் என நான் நம்புகிறேன். ஆனால், நாம் அதனை திறமையுடன் சமாளித்தால், அது ஒற்றுமை அலையாக மாறும் என தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

நேற்று கோம்பாக்கிலுள்ள சுங்கை பூசு தேசிய இடைநிலைப் பள்ளியில் தனது வேட்புமனுவை சமர்ப்பித்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

கெஅடிலான் கட்சியின் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அடிக்கடி பாடும் 'ஹோய் ஹோய் யா ஹோய்' என்ற பாடலின் வரிகளை பெரிக்காத்தான் நேஷனல் - பக்காத்தான் ஹராப்பான் ஆதரவாளர்கள் பாடிக் கொண்டு கேலி செய்வது பற்றி கேட்டபோது, பிரச்சாரத்தின்போது கேலி செய்வது சகஜம் என்றும் அமிருடின் கூறினார்.

பி ராம்லி உருவாக்கிய 'ஹோய் ஹோய் யா ஹோய்' பாடல், கொள்ளைக்காரன் என்று வர்ணிக்கப்படும் எதிரியை விமர்சிக்க அன்வார் அடிக்கடி பாடி வருவார்.